*Approved by the Text-book Committee for class use*

புதுமுறை நீதிச்செய்யுள் நூல்கள்-மலர் உ

# தண்டலையார் சதக சாரம்

[அரும்பதவுரையுடன் கூடியது]

உ

பதிப்பாசிரியர்

மே. சக்கரவர்த்தி நயினர்

[நான்காம் பதிப்பு]

M. CHAKRAVARTHI NAINAR
EDUCATIONAL PUBLISHER, KOLAPALUR,
ARNI, N. A. Dt.
1937

[*Price As. 2*

## புதுமுறை நீதிச் செய்யுள் நூல்கள்

திரு. மே. சக்கரவர்த்தி நயினர் தொகுத்தவை

செய்யுள் பாடமாக வைக்கத்தகுந்தவை. ஒவ்வொரு சதக நூலிலும் அரும்பதவுரை சேர்க்கப்பட்டிருக்கிறது. துரைத்தனத்தாரால் இவை யாவும் அங்கீகரிக்கப்பட்டவை.

| | | |
|---|---|---|
| மலர் க | - அறப்பளீசுர சதக சாரம் | 3 அணா |
| ,, உ | - தண்டலையார் சதக சாரம் | 2 ,, |
| ,, ௩ | - விவேக சிந்தாமணி | 2 ,, |
| ,, ௪ | - குமரேச சதக சாரம் | 3 ,, |

இவை கிடைக்குமிடம்:—

M. சக்கரவர்த்தி நயினர்,
கொழப்பலூர் போஸ்ட், (N. A. Dt.) via ஆரணி

## பாலர் நீதிபோதினி

திரு. மே. சக்கரவர்த்தி நயினர் இயற்றியவை

செய்யுள் நீதிக் கதைகளாகவும், உபபாடமாகவும் வைக்கத்தகுந்தவை. சென்னை டெக்ஸ்ட்புக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகள் சென்னை, பவழக்காரத்தெரு, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தில் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| மலர் க | உலகநீதிக் கதைகள் | II வகுப்பு | 2 அணா |
| ,, உ | ஆத்திசூடிக் கதைகள் | III ,, | 3 ,, |
| ,, ௩ | வெற்றிவேற்கைக் கதைகள் | IV ,, | 4 ,, |

புதுமுறை நீதிச் செய்யுள் நூல்கள்: மலர் உ.

உ

கடவுள் துணை

# தண்டலையார் சதக சாரம்

[அரும்பதவுரையுடன் கூடியது]

துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது

[நான்காம் பதிப்பு]

மே. சக்கரவர்த்தி நயினார்
கொழப்பலூர் போஸ்ட், ஆரணிமார்க்கம்
வட ஆற்காடு ஜில்லா.
1937

பதிப்புரிமை] [விலை அணா 2

164513

*Approved by the Text Book Committee Vide page 180 part I-B Fort St. George Gazette 4-5-1937.*

O-,16 K.PK,T
N37

THE PROGRESSIVE PRINTERS
:: MADRAS. ::

# முன்னுரை

பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம், படிக்காசுப் புலவர் பெருமானால், சோழவள நாட்டிலே காவிரி நதியின் தென்கரையிலேயுள்ள தண்டலை நீணெறித் தலவாசிகளின் வேண்டுகோளுக்கிணங்கி, அத்திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள சிவபெருமானை ஒவ்வொரு செய்யுள்தோறும் துதித்து, செய்யுள்களின் ஈற்றடிகளில் பழமொழிகளை அமைத்து நீதிகள் விரவிவரப் பாடப்பெற்றதாகும். ஒவ்வொரு செய்யுளின் ஈற்றிலும் பழமொழிகள் அமைந்திருப்பதனால், இந்நூலுக்குப் பழமொழி விளக்கம் என்னும் பெயரும் வழங்குவதாயிற்று.

படிக்காசுப் புலவர் பெருமான் இன்றைக்குச் சுமார் முந்நூறு வருடங்கட்கு முன்னே, தொண்டை மண்டலத்திலே, பொன் விளைந்த களத்தூரிலே, செங்குந்தர் மரபிலே தோன்றி, நல்லாசிரியர்களை அடுத்துச் செந்தமிழ் நூல்கள் பலவும் பயின்றவர். தொண்டைமண்டல சதகம், புள்ளிருக்கும் வேளூர் கலம்பகம் முதலியவை அவர் இயற்றியனவே. அவரால் பல சமயங்களில் சமயோசிதமாகப் பாடப்பெற்ற பாடல்களும் யாவராலும் விரும்பி வாசிக்கத்தக்கன. இவருடைய செய்யுட்டிறந்தைக் குறித்துச் சொக்கநாதப் புலவர் என்பவர் "மட்டாரும் தேன்களந்தைப் படிக்காசன் உரைத்தகவி வரைந்த ஏட்டை, பட்டாலும் சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும், பரிந்தவ் ஏட்டைத் தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய் மணக்கும் துய்யசேற்றில், நட்டாலும் தமிழ்ப் பயிராய் விளைந்திடுமே பாட்டினது நளினந் தானே" என்று சிறப்பித்துக்கூறியிருக்கின்றார். படிக்காசர் திருத்தருமபுர ஆதீனத்து மகா சன்னிதானமாகவும் இருந்தார்.

இத்தகைய புலவர் பெருமான் இயற்றியருளிய பழமொழி விளக்கம் என்னும் தண்டலையார் சதகம், பல நீதிகளையுடையதாயும், செய்யுள்கள் படிப்போரது மனத்தில்

# முன்னுரை

பசு மரத்தாணிபோல் பதியத் தக்கனவாயும் அமைந்திருப்பதால், பள்ளியில் கல்வி பயிலும் சிறுவர்கள் இளமையிலேயே இத்தகைய நூல்களை வாசித்து நீதிகளை அறிந்துகொள்வது நன்றெனக் கருதி, பெண்களைக் குறித்துக் கூறுமவைகளை நீக்கிச் சிறுவர்களுடைய மனோபாவத்துக் கியைந்த செய்யுள்களாகத் திரட்டி, தண்டலையார் சதக சாரம் என்னும் பெயருடன் இந்நூலை நான் வெளியிடலானேன்.

ஒவ்வொரு செய்யுளுக்கும் அடியில் உரையிருந்தால், உபாத்தியாயர் பிள்ளைகளை நோக்கி அரும்பதங்கட்கு உரைகேட்கும்போது, பிள்ளைகள் செய்யுள்களின் அடியில் குறிப்பிட்டிருக்கும் அரும்பதவுரையை அப்படியே ஒப்பித்து விடுகின்றனர். இது பிள்ளைகளின் சிந்தனா சக்தியைக் குறைத்து விடுகிறது.

அதற்காகவே இந்நூலின் முதலிலே செய்யுள்களின் மூலங்களையும், ஈற்றில் அநுபந்தமாக அரும்பதக் குறிப்புரைகளையும் எழுதிச் சேர்த்திருக்கின்றேன்.

இதிலடங்கியுள்ள செய்யுட்கள் சிறுவர்களின் மனோபாவத்துக் கியைந்தவாறு அமைந்துள்ளன. அன்றியும் பள்ளிக்கூடங்களின் ஒரு வருஷப் பாடத்திற்குத் தகுந்தபடி செட்யுட்களின் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டிருக்கின்றது. வாசகம், பொது அறிவு, கணக்கு முதலிய பாடங்களுக்கிடையே, இத்தகைய செய்யுள் நூல்களிலிருந்து ஆசிரியர் வாரம் ஒருமுறை செய்யுள்பாடம் நடத்துவாராதலால், செய்யுட்களின் எண்ணிக்கையையும் வரையறுத்து எழுதவேண்டியதாயிற்று.

சீர்திருத்த முறைக்கேற்ப இந்நூல் வெளியாவதால், ஆசிரியர்கள் இந்நூலைப் பாடசாலைச் சிறுவர்களுக்குச் செய்யுள் பாடப் புத்தகமாக வைத்து, இதுபோன்ற நீதிச் சதக நூல்கள் வெளியாவதற்கு எனக்கு ஊக்கம் அளிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

குழப்பலூர்,
17-4-'29

இங்ஙனம்,
மே. சக்கரவர்த்தி.

உ

கடவுள் துணை

# பழமொழி விளக்கம்

என்னும்

# தண்டலையார் சதக சாரம்

## காப்புச் செய்யுள்

### விநாயகர் வணக்கம்

வேதநெறி விளம்பியசொல், ஆகமநூல்
விளம்பியசொல், மிகு புராணம்
ஏதுவினில் காட்டியசொல், இலக்கணச் சொல்
இசைந்தபொருள் எல்லாம் நாடி
ஆதிமுதல் உலகுதனில் விளங்குபழ
மொழிவிளக்கம் அறிந்து பாடச்
சோதிபெறு மதவேழ முகத்தொருவன்
அகத்தெனக்குத் துணை செய்வானே.

## நூல்

### 1. கடவுள் வணக்கத்தின் நன்மை

வரமளிக்குந் தண்டலையார் திருக்கோயில்
உட்புகுந்து வலமாய் வந்தே,
ஒருவிளக்கா யினும்பசுவின் நெய்யுடன்தா
மரை நூலின் ஒளிர வைத்தால்,
கருவிளக்கும்; பிறப்புமில்லை; இறப்புமில்லை;
கைலாசங் காணி யாகும்;
திருவிளக்கிட் டார் தமையே தெய்வமறிந்
திடும்; வினையுந் தீரும் தானே.

### 2. கடவுளின் உபகாரம்

கூன்செய்த பிறையணியுந் தண்டலையார்
கருணைசெய்து கோடி கோடி
யான்செய்த வினையகற்றி நன்மைசெய்தால்
உபகாரம் என்னால் உண்டோ?
ஊன்செய்த உயிர்வளரத் தவந்தானம்
நடந்தேற உதவியாக
வான்செய்த நன்றிக்கு வையகமேன்
செய்யுமதை மறந்திடாதே.

### 3. பரோபகாரஞ் செய்தல்

தன்மமதைச் செயல்வேண்டும்; தண்டலைநீள்
நெறியாரே தயவு செய்வார்
வன்மவினை செயல்வேண்டாம்; பொய்வேண்டாம்
பிறரையொன்றும் வருத்தல் வேண்டாம்;

கன்மநெறி வரல்வேண்டாம்; வேண்டுவது
பலர்க்குமுப காரமாகும்;
நன்மைசெய்தார் நலம்பெறுவர் ; தீமைசெய்தார்
தீமைபெற்று நலிவர் தாமே.

4. நல்லபிள்ளை பெறுதலின் மேன்மை

நன்றிதரும் பிள்ளையொன்று பெற்றாலும்
குலமுழுதும் நன்மை உண்டாம் ;
அன்றியறி வில்லாத பிள்ளையொரு
நூறுபெற்றும் ஆவ(து) உண்டோ ?
மன்றினடம் புரிவாரே ! தண்டலையாரே !
சொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல ஈன்றுமென்ன ? குஞ்சரமோன்(று)
ஈன்றதனாற் பயனுண் டாமே.

5. விருந்தோடு உண்ணலே சிறந்தது

திருவிருந்த தண்டலையார் வளநாட்டில்
இல்வாழ்க்கை செலுத்தும் நல்லோர்
ஒருவிருந்தா யினுமின்றி உண்டபகல்
பகலாமோ ? உறவாய் வந்த
பெருவிருந்துக்(கு) உபசாரஞ் செய்தனுப்பி
'இன்னமெங்கே பெரியோர் ?' என்று
வருவிருந்தோ(டு) உண்பதல்லால் விருந்தில்லா(து)
உணுஞ் சோறு மருந்து தானே.

**6. மதிப்புள்ள பொருளினும், அன்பான உபசாரமே மேலானது**

பொற்குடையும், பொற்றுகிலும், பொற்பணியும்,
கொடுப்ப(து) என்ன பொருளோ என்று,
நற்கமல முகமலர்ந்தே உபசாரம்
மிக்க இன்சொல் நடத்தல் நன்றே;
கற்கரையும் மொழிபாகர் தண்டலையார்
வளநாட்டிற் கரும்பின் வேய்ந்த
சர்க்கரையின் பந்தலிலே தேன்மாரி
பொழிந்துவிடுந் தன்மை தானே.

7. காலத்தில் செய்த உதவி சிறிதாயினும்
அதைப் பெரிதாக மதிக்க வேண்டும்.

துப்பிட்ட ஆலம்விதை சிறிதெனினும்
பெரிதாகும் தோற்றம் போலச்
செப்பிட்ட தினையளவு செய்தநன்றி
பனையளவாய்ச் சிறந்து தோன்றும்
கொப்பிட்ட உமைபாகர் தண்டலையார்
வளநாட்டில் கொஞ்சமேனும்
உப்பிட்ட பேர்கடமை உளவரையும்
நினைக்குமிந்த உலகந் தானே.

8. கீழ்மக்களுக்கு என்ன உபதேசஞ் செய்தாலும்
அவர்கள் திருந்தார்கள்

சங்கையறப் படித்தாலும், கேட்டாலும்,
பிறர்க்குறுதி தனைச்சொன்னாலும்,
அங்கணுலகிற்சிறியோர் தாமடங்கி
நடந்துகதி அடைய மாட்டார்;

திங்களணி சடையாரே! தண்டலையாரே!
சொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே.

## 9. பொறுமைப்படுவதனுல் பலனில்லை

அள்ளித்தெள் நீறணியும் தண்டலையார்
வள நாட்டில் ஆண்மை உள்ளோர்,
விள்ளுற்ற கல்வியுள்ளோர் செல்வமுள்ளோர்
அழகுடையோர் மேன்மை நோக்கி,
உள்ளத்தில் அழன்றழன்று நமக்கில்லை,
என உரைத்திங்(கு) உழல்வார் எல்லாம்,
பிள்ளைபெற் றவர்தமைப்பார்த்(து) இருந்துபெரு
மூச்செறியும் பெற்றி யாரே.

## 10. துஷ்டர் நற்புத்தி கேளார்; மடையர் மதுரகவிக்கும் கொடார்.

கொடியருக்கு நல்லபுத்தி சொன்னாலும்
தெரியாது; கொடையில் லாத
மடையருக்கு மதுரகவி உரைத்தாலும்
அவர்கொடுக்க மாட்டார் கண்டீர்!
படியளக்கும் தண்டலை நீள் நெறியாரே!
உலகமெலாம் பரவி மூடி
விடியமட்டு மழைபெயினும் அதி(ன்) ஒட்டாங்
கிச்சின்முளை வீசி டாதே.

## 11. ஈயாதார் வாழ்வு ஒன்றுக்கும் பயனில்லை

கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்
 கனிகளுப காரம் ஆகும்;
சிட்டருமவ் வணந்தேடும் பொருளையெல்லாம்
 இரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார்
மட்டுலவுஞ் சடையாரே! தண்டலையாரே!
 சொன்னேன் வனங்கள் தோறும்,
எட்டிமரம் பழுத்தாலும், ஈயாதார்
 வாழ்ந்தாலும் என்னுண் டாமே?

## 12. கீர்த்திபெற்று வாழ்தலே மனிதருக்கு அழகு

ஓதரிய தண்டலையார் அடிபணிந்து
 நல்லவனென்(று) உலகம் எல்லாம்,
போதமிகும் பேருடனே புகழ்படைத்து
 வாழ்பவனே புருடன்; அல்லால்,
ஈதலுடன் இரக்கமின்றிப் பொன்காத்த
 பூதமென இருந்தால் என்ன?
காதவழி பேரில்லான் கழுதையோ(டு)
 ஒக்குமெனக் காண லாமே.

## 13. உயிர்வதை செய்வார் நரகம் எய்துவார்

முன்னரிய மறைவழங்குந் தண்டலையார்
 ஆகமத்தின் மொழிகே ளாமல்,
மன்னுயிரை வதைத்தவனும், கொன்றவனும்,
 குறைத்தவனும் பேரு ளோனும்,

அந்நெறியே சமைத்தவனும், உண்டவனும்
நரகுறுவர் ; ஆதலாலே
தன்னுயிர்போல் எந்நாளும் மன்னுயிருக்(கு)
இரங்குவதுந் தக்க தாமே.

## 14 ஆஷாட பூதிகள்

காதிலே திருவேடம், கையிலே
செபமாலை, கழுத்தின் மார்பின்
மீதிலே தாழ்வடங்கள், மனதிலே
கரவடமாம் வேடம் ஆமோ ?
வாதிலே அயன்தேடும் தண்டலைநீள்
நெறியாரே ! மனிதர் காணும்
போதிலே மவுனம் (இ)ராப் போதிலே
உருத்திராக்கப் பூனை தானே.

## 15. பொய் சொல்லி வாழ்ந்தவர் இல்லை

கைசொல்லும் பனைகாட்டும், களிற்றுரியர்
தண்டலையைக் காணார் போலப்,
பொய் சொல்லும் வாயினர்க்குப் போசனமும்
கிடையாது ; பொருளில் லாது;
மைசொல்லும் காரளிசூழ் தாழைமலர்
பொய்சொல்லி வாழ்ந்த(து) உண்டோ ?
மெய்சொல்லி வாழாதான் பொய்சொல்லி
வாழ்வதில்லை மெய்ம்மை தானே.

16. பெரியோர்களை அற்பர்கள் தூஷித்தாலும் அதனால் அவர்களுக்குப் பெருமை குறையாது

அந்தணரை நல்லவரைப் பரமசிவன்
அடியவரை அகந்தை யாலோர்
நிந்தனை சொன் னாலுமென்ன, வைதாலும்
என்ன அதில் நிஷேதம் உண்டோ?
சுந்தரர்க்குத் தூதுசென்ற தண்டலை நீள்
நெறியாரே! துலங்கும் பூர்ண
சந்திரனைப் பார்த்துநின்று நாய்குரைத்த
போதிலென்ன தாழ்ச்சி தானே?

17. செங்கோல் செலுத்தும் அரசன் தெய்வத்துக்குச் சமம்

நாற்கவியும் புகழவரும் தண்டலையார்
வளநாட்டில், நல்ல நீதி
மார்க்கமுடன் நடந்து செங்கோல் வழுவாமல்
புவியாளும் வண்மை செய்த
தீர்க்கமுள்ள அரசனையே, தெய்வமென்பார்;
கொடுங்கோன்மை செலுத்தி நின்ற
மூர்க்க முள்ள அரசனும்தன் மந்திரியும்
ஆழ்நரகின் மூழ்கு வாரே.

18. அழகின் வகை

ஓதரிய வித்தைதந்தால் உரியசபைக்(கு)
அழகாகும்; உலகில் யார்க்கும்,
ஈதலுடன் அறிவுவந்தால் இனியகுணங்
களுக்கழகாய் இருக்கும்; அன்றோ?

நீதிபெறுந் தண்டலையார் திருநீறு
மெய்க்கழகாய் நிறைந்து தோன்றும்;
காதிலணி கடுக்கனிட்டால் முகத்தினுக்கே
அழகாகிக் காணுந் தானே.

19. போலி குருக்களிடம் உபதேசம் பெறலாகாது

அருள்மிகுந்த ஆகமநூல் படித்தறியார்
கேள்வியையும் அறியார், முன்னே
இருவினையின் பயனறியார், குருக்களென்றே
உபதேசம் எவர்க்கும் செய்வார்,
வரமிகுத்த தண்டலைநீள் நெறியாரே!
அவர்கிரியா மார்க்கம் எல்லாம்
குருடனுக்குக் குருடன்கோல் கொடுத்துவழி
காட்டிவருங் கொள்கை தானே.

20. உரிய காலத்தில் காரியத்தை முடிக்கவேண்டும்

நேற்றுள்ளார் இன்றிருக்கை நிச்சயமோ?
ஆதலினால் நினைந்த போதே,
ஊற்றுள்ள பொருளுதவி அறம்தேடி
வைப்பதறி வுடைமை அன்றோ?
கூற்றுள்ள மலையவரும் தண்டலையாரே!
சொன்னேன் குடபால் வீசும்
காற்றுள்ள போது(எ)வரும் தூற்றிக்கோள்
வதுநல்ல கருமம் தானே.

### 21. ஒவ்வொருவருக்கும் வரும் இன்பதுன்பங் கட்குப் பிறர் காரணமாகார்

வைதிடினும், வாழ்த்திடினும், இன்பதுன்பம்
வந்திடினும், வம்பு கோடி
செய்திடினுந், தண்டலைநீள் நெறியார்தம்
செயலென்றே தெளிவ(து) அல்லால்,
மெய்தவிர அவர்செய்தார் இவர்செய்தார்
என நாடி வெறுக்க லாமோ ?
எய்தவர்தம் அருகிருக்க அம்பைநோந்த
கருமமென்ன ? இயம்பு வீரே.

### 22. யாருக்கு உதவி செய்ய வேண்டுமென்பது

சுற்றமாய் நெருங்கியுள்ளார், தனையடைந்தார்,
கற்றறிந்தார், துணைவே(று) இல்லார்,
உற்றவே தியர், பெரியோர்க்(கு) உதவியின்றிப்
பிறர்க்குதவும் உதவி எல்லாம்,
சொற்றநான் மறைபரவும் தண்டலையாரே !
சொன்னேன், சுமந்தே நொந்து,
பெற்றதாய் பசித்திருக்கப் பிராமணபோ
சனநடத்தும் பெருமை தானே.

### 23. துன்மார்க்கர் சன்மார்க்கருடைய இயல்பு

துன்மார்க்கர்க்(கு) ஆயிரந்தான் சொன்னாலும்
மறந்துவிட்டுத் துடுக்கே செய்வார் ;
சன்மார்க்கர்க்(கு) ஒருவார்த்தை சொலுமளவே
மெய்யதனில் தழும்பாக் கொள்வார் ;

பன்மார்க்க மறைபுகழும் தண்டலையாரே !
சொன்னேன் ; பதமே யான
நன்மாட்டுக்(கு) ஓரடியாம் ; நற்பெண்டீர்க்(கு)
ஒருவார்த்தை; நடத்தை யாமே.

## 24. அற்பருக்கு வாழ்வு வந்தால், அவர்கள் நடந்து கொள்ளும் இயல்பு

விற்பனர்க்கு வாழ்வுவந்தால், மிகவணங்கிக்
கண்ணோட்ட மிகவும் செய்வார் ;
சொற்பருக்கு வாழ்வுவந்தால் கண்தெரியா(து)
இறுமாந்து துன்பம் செய்வார் ;
பற்பலர்க்கு வாழ்வுதரும் தண்டலையாரே !
சொன்னேன் பண்பில் லாத
அற்பருக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்
திரிகுடைமேல் ஆகும் தானே.

## 25. அநியாயமாய்ப் பெற்ற பொருளைக் கொண்டு தருமஞ் செய்தல் சிறப்பாகாது

விசையமிகும் தண்டலையார் வளநாட்டில்
ஒருத்தர் சொல்லை மெய்யாய் எண்ணி,
வசைபெருக அநியாயஞ் செய்துபிறர்,
பொருளை யெல்லாம் வலியவாங்கித்
திசைபெருகுங் கீர்த்தியென்றுந், தன்மமென்றும்,
தானமென்றும், செய்வ(து) எல்லாம்,
பசுவினையே வதைசெய்து செருப்பினைத்தா
னங்கொடுக்கும் பண்புதானே.

## 26. இன்னின்னருக்கு இன்னது இல்லை யெனல்

கற்றவர்க்குக் கோபமில்லை ; கடந்தவர்க்குச்
சாதியில்லை ; கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்பமில்லை ; நல்லவர்க்(கு)
ஒருகாலும் நரகம் இல்லை ;
கொற்றவர்க்(கு) அடிமையில்லை ; தண்டலையார்
மலர்ப்பாதம் கும்பிட்(டு) ஏத்தப்
பெற்றவர்க்குப் பிறப்பில்லை ; பிச்சைசோற்
றினுக்கில்லை பேச்சுத் தானே.

## 27. சபையில் பேசவேண்டிய முறை

நேசமுடன் சபையில் வந்தால், வேளையறிந்(து)
இங்கிதமாய் நிருபர் முன்னே,
பேசுவதே உசிதமல்லாமல், நடுவிலொரு
வன்குழறிப் பேசல் எல்லாம்,
வாசமிகும் தண்டலை நீள் நெறியாரே !
அபிஷேக மலிநீர் ஆட்டிப்
பூசைபண்ணும் வேளையிலே, கரடியைவிட்(டு)
ஓட்டுவது போலும், தானே.

## 28. ஒருவன், தான்கெடவே பிறருக்குக் கேடு நினைப்பான்

மண்ணுலகிற் பிறர் குடியை வஞ்சனையில்
கெடுப்பதற்கு மனதினாலே,
உன்னிடினும், உரைத்திடினும், அவன்றானே
கெடுவனென்ப(து) உண்மை அன்றோ ?

தென்னவன்சோ ழன்பணியும் தண்டலைநீள்
நெறியாரே! தெரிந்து செய்யும்
தன்வினை தன் னைச்சுட, ஓட்(டு) அப்பம் வீட்
டைச்சுடவும் தான்கண் டோமோ.

## 29. அவரவர்க்குத் துணை இன்னது எனல்

அந்தணர்க்குத் துணைவேதம்; அரசருக்குத்
துணைவயவாள்; அவனி மீது
மைந்தருக்குத் துணை தாயர்; தூதருக்குத்
துணைமதுர வார்த்தை; அன்றோ?
நந்தமக்குத் துணையான தண்டலைநீள்
நெறியாரே நண்ப ரான
சுந்தரர்க்குத் துணை; நாளும் ஏழையர்க்குத்
தெய்வமே துணையென் பாரே.

## 30. பணம் பத்தெட்டு வகை செய்யும்

பணந்தானே அறிவாகும்; பணந்தானே
வித்தையுமாம்; பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும்; பணமில்லா
தவர்பிணமாம்: பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்கும்; தண்டலைநீள்
நெறியாரே! பார்மீ தில்தான்
பணந்தானே பந்தியிலே குலந்தானே
குப்பையிலே படுக்குந் தானே.

## 31. எல்லாமயமும் சோற்றுமயம் எனல்

சோறென்ன செய்யும்? எல்லாம் படைத்திடவே
செய்யும்; அருள் சுரந்து காக்கும்;
சோறென்ன செய்யும்? எல்லாம் அழித்திடவே
செய்யும்; அதன் சொரூபம் ஆக்கும்
சோறென்ன எளிதேயோ? தண்டலையார்
தம்பூசை துலங்கச் செய்யும்
சோறென்ன செய்யுமெனில், சொன்னவண்ணம்
செயும் பழமை தோற்றும் தானே.

## 32. அவரவர் குணம் அவரவருக்கு நன்மை யெனப்படல்

எத்தருக்கும், உலுத்தருக்கும், ஈனருக்கும்,
மூடருக்கும், இரக்கம் பாரா
மத்தருக்கும், கொடிதாமவ் வக்குணமே
நற்குணமா வாழ்ந்து போவார்;
பத்தருக்கு நலங்காட்டும் தண்டலையா ரே!
அறிவார் பழிப்பா ரேனும்
பித்தருக்குத் தங்குணமே நூலினுஞ் செம்
மையதான பேற்றி யாமே.

## 33. நிலைமைக்குத் தக்கபடி நடக்கவேண்டும் என்பது

பன்னகவே ணிப்பரமர் தண்டலையார்
நாட்டிலுள பலருங் கேளீர்!
தன்னறிவு தன்னினைவு தன் மகிமைக்(கு)
எற்றநடை தருமே அல்லால்

சின்னவரும் பெரியவர்போ லேநடந்தால்
உள்ளதுபோம்; சிறிய காகம்
அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையும்
கெட்டவகை ஆகுந் தானே.

## 34. ஐவகை பொல்லாத கள்ளர்கள்

செழுங்கள்ளு நிறைசோலைத் தண்டலைநீள்
நெறியாரே! திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர்; பொல்லாத
கள்ளரினி யாரோ? என்றால்
கொழுங்கள்ளர், தம்முடன்கும் பிடுங்கள்ளர்,
திருநீறு குழைக்கும் கள்ளர்,
அழுங்கள்ளர், தொழுங்கள்ளர், ஆசாரக்
கள்ளரிவர், ஐவர் தாமே.

## 35. அகமும் புறமும் ஒத்துப் பேசவேண்டும்

தனத்திலே மிகுத்தசெழுந் தண்டலையார்
பொன்னிவளம் தழைத்த நாட்டில்,
இனத்திலே மிகும்பெரியோர், வாக்குமனம்
ஒன்றாகி எல்லாம் செய்வார்;
சினத்திலே மிகுஞ்சிறியோர், காரியமோ
சொல்வ தொன்று, செய்வதொன்று,
மனத்திலே பகையாகி உதட்டிலே
உறவாகி மடிவர் தாமே.

### 36. சூது ஆடலாகாது

கைக்கெட்டா(து) ஒரு பொருளும், கண்டவர்க்கு
நகையாகும், கனமே இல்லை,
இக்கட்டாம் வருவதெல்லாம்; இலாபமுண்டோ?
கவறு கையில் எடுக்கல் ஆமோ?
இக்கெட்டே றியகீர்த்தித் தண்டலையார்
வளநாட்டிற் சீ! சீ!! என்னச்
சோக்கட்டான் எடுத்தவர்க்குச் சோக்கட்டான்
சூதுபோல்லாச் சூது தானே.

### 37. பெரியோர் அடக்கமும் சிறியோர் அடக்கம் இன்மையும்

பொறுமையுடன் அறிவுடையார் இருந்தவிடம்
விளக்கேற்றிப் புகுதல் வேண்டும்;
கெருவமுடன் அகந்தையுள்ளார் இறுமாந்து
நடந்துதலை கீழா வீழ்வார்;
வறுமையினும் மறுமையினும் காணலாம்
தண்டலையார் வாழு நாட்டில்
நிறைகுடமோ தளும்பாது; குறைகுடமே
கூத்தாடி நிற்ப தாமே.

### 38. நல்லவர் செல்வம் எல்லோருக்கும் பயன்படல்

ஞாலமுறு நல்லவர்க்குச் செல்வம்வந்தால்
எல்லவர்க்கும், நாவல் லோர்க்கும்
காலமறிந்(து) அருமையுடன் பெருமையறிந்(து)
உதவிசெய்து கனமே செய்வார்;

மாலறியாத் தண்டலைநீள் நெறியாரே !
அவரிடத்தே வருவார் யாரும் ;
ஆலமரம் பழுத்தவுடன் பறவையின்பால்
சீட்டெவரே அனுப்பு வாரே ?

## 39. நற்குணமில்லா மனைவியோடு வாழல்

அடுத்தமனை தொறும் புகுவாள், கணவனுணும்
முனமுண்பாள், அடக்கம் இல்லாள்,
கடுத்தமொழி பேசிடுவாள், சிறு தனந்தே
டுவள்(இ)வளைக் கலந்து வாழ்தல்
எடுத்தவிடைக் கொடியாரே ! தண்டலையாரே !
எவர்க்கும் இன்பம் ஆமோ ?
குடித்தனமே கெடவேண்டிப் பிடாரிதனைப்
பெண்டுவைத்துக் கொண்ட தாமே.

## 40. யாசகர் நிலைமை

ஆழியெல்லாம் பாலாகி அவனியெல்லாம்
அன்னமயம் ஆனால் என்ன ?
சூழவரும் இரவலர்க்கும் பசிதீர
உண்டிருக்குஞ் சுகந்தான் உண்டோ ?
ஏழுலகும் பணியவரும் தண்டலையாரே !
சொன்னேன் எந்த நாளும்
நாழிநெல்லுக் கொருபுடவை விற்றாலும்
நிருவாணம் நாய்க்குத் தானே.

## 41. கீழ்மக்களின் குணம்

நித்தமெழு நூறுநன்றி செய்தாலும்,
ஒருதீது நேரே வந்தால்,
அத்தனையும் தீதென்பார்; பழிக்குமக்
கயவர்குணம் அகற்றல் ஆமோ?
வித்தகஞ்சேர் தண்டலையார் வளநாட்டில்
சாம்பலிட்டு விளக்கி னாலும்
எத்தனை செய்தாலுமென்ன? பித்தளைக்குத்
தன்னாற்றம் இயற்கை யாமே.

## 42. தருமஞ் செய்தால் செல்வம் பெருகும்

சலியாமற் றண்டலையில் தாயகனார்
அருள்கொண்டு தருமம் செய்யப்,
பொலிவாகிக் கொழுமீதில் வந்த பொருள்
ஈந்தவைதாம் போக, மீந்தால்
மலிவாகிச் செல்வமுண்டாம்; வயன்முழுதும்
வந்திடுநன் மாரி யாகும்;
கலியாணப் பஞ்சமில்லை; களப்பஞ்சம்
இல்லையொரு காலும் தானே.

தண்டலையார் சதக சாரம்

முற்றிற்று.

# தண்டலையார் சதக சாரம்

## அரும்பதவுரை

25
164513

கார்ப்பு: வேதநெறி-வேதமார்க்கம். விளம்பிய-சொன்ன. ஆகமநூல் - சமய சாஸ்திரம். இசைந்தபொருள் எல்லாம் - (வேதம், ஆகமம், புராணம், இலக்கணம், ஆகிய நால்வகைச் சொற்களிலும்) பொருந்திய விஷயம். சோதி பெறு - ஜோதி சொரூபமாய் விளங்கும் சிவபெருமான் பெற்ற. வேழமுகம் - யானைமுகம். அகம் - மனம்.

1. தண்டலையார் - தண்டலை என்னும் ஊரில் எழுந்தருளிய சிவபெருமான். திரு - அழகிய. ஒளிர - பிரகாசிக்க. கரு விளக்கும் - கருவிளங்கும், பிறவி பயனுடையதாகும். கைலாசம் - சிவபெருமான் வீற்றிருக்கும் ஸ்தலம். காணி - உரிமை.

பழமொழி விளக்கம்: திருவிளக்கிட்டாரைத் தெய்வம் அறியும். விளக்கிட்டால் வினை தீரும்.

2. கூன்செய்தபிறை - வளைந்த சந்திரன் (மூன்றாம்பிறைச் சந்திரன்). கோடி கோடி -அநேகம்; அடுக்குப் பொருளில் விசேடத்தை உணர்த்திற்று.

ஊன்செய்த - தசையாலான. வான் - மழை. வையகம் - உலகம்.

பழ - விள: வான்செய்த நன்றிக்கு வையகம் என்செய்யும்.

3. வன்மவினை-கொடிய செய்கை. தன்மம்-தருமம். கன்மநெறி - பாவ மார்க்கம். நலிவர் - அழிவர்.

பழ - விள: நன்மைசெய்தார் நன்மை அடைவர். தீமை செய்தார் தீமை அடைவர். வினை விதைத்தவன் வினையறுப்பான்; தினைவிதைத்தவன் தினையறுப்பான்.

4. நன்றிதரும்- நன்மையை உண்டாக்கும். மன்றில் - சிற்றம்பலத்தில். மன்று-சபை. ஈன்றும்-பெற்றும். குஞ்சரம்-யானை.

பழ - விள: பன்றி பலகுட்டிபோட்டென்ன? யானை ஒரு குட்டிபோட்டாலும் பலன் உண்டு.

O-,16KPK,T
N37

5. திரு - இலக்குமி; செல்வம். இல்வாழ்க்கை - மனைவி மக்களோடு இருந்து நடத்தும் இல்லறவாழ்வு. விருந்து - விருந்தாளி. வருவிருந்து - எதிர்காலத்தில் வரும் விருந்து. உணும் - உண்ணும்.

பழ - விள : விருந்தில்லாத சோறு மருந்து.

6. பொன்துகில் - பீதாம்பரம்; பொன்சரிகையாலான ஆடை. பொன்மணி - பொன்னால் செய்த ஆபரணம். கமலம் - தாமரைமலர். கற்கரையு மொழி - கல்லுங்கரையும் இனிய மொழி பேசும் உமாதேவி. (அன்மொழித்தொகை). கரும்பின் வேய்ந்த - கரும்பினால் போடப்பட்ட.

பழ - விள : சர்க்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்தது போல்.

7. துப்பு - சிவப்பு. துப்பிட்ட - சிவந்த. செப்பு - சிறு செப்பு. பனை அளவா - பனையின் அளவாக. கொப்பு - பெண்களின் காதணி. உமைபாகர் - உமாதேவியை இடபாகத்திலேயுடைய சிவபெருமான்.

பழ - விள : உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க வேண்டும்.

8. சங்கை அற - சந்தேகம் நீங்க. அம் + கண் + உலகம் = அங்கணுலகம் - அழகிய இடமகன்ற உலகினிலே. கதி - நற்பிறப்புக்கு ஏதுவாகிய புண்ணியம். திங்கள் - சந்திரன்.

பழ - விள : கங்கையில் படர்ந்தாலும் பேய்ச் சுரைக்காய் நல்ல சுரைக்காயாகாது.

9. தெள்நீறு - தெள்ளிய விபூதி; சுத்தமான விபூதி. வின்னூற்ற - தோர்ந்த. உள்ளம் - மனம். அழன்று - பொறாமையினால் கோபித்து. உழல்வார் - கஷ்டப்படுவார். பெற்றி - தன்மை.

பழ - விள : பிள்ளை பெற்றவளைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டதைப்போல்.

10. கொடியருக்கு - துஷ்டருக்கு. கொடை இல்லாத - கொடுத்தல் தன்மை இல்லாத. மடையர் - புத்தியில்லாதவர்,

மதுரகவி - நால்வகைக் கவிகளில் ஒன்று; இனிமையான கவியென்றும் பொருள் கொள்வர். படி - பூமி.

பழ - விள: விடியற்காலம் வரையில் மழை பொழிந்தாலும் ஓட்டாங்கச்சி முளைகிளம்பாது.

11. கட்டுமாங்கனி - ஒட்டுமாமரத்தின் பழம். பலவின் கனி - பலாப்பழம். சிட்டர் - மேலோர்; சிரேஷ்டர். அவ்வணம் - அவ்வண்ணம்; அவ்விதம். இரப்பவர் - யாசிப்பவர். மட்டு உலவும் - வாசனை வீசுகின்ற. வனம் - காடு.

பழ - விள: எட்டிமரம் பழுத்தென்ன? ஈயாதார் வாழ்ந்தென்ன?

12. ஓது அரிய - சொல்லுதற்கு அருமையான. போதம் - ஞானம். புகழ் - கீர்த்தி. இரக்கம் - தயவு. காதவழி - பத்துக் கல் தூரம். ஒக்கும் - நிகர்க்கும்.

பழ - விள: காதவழி பேரில்லான் கழுதைக்குச் சமமாவான்.

13. மறை - வேதம். உயிரைவதைத்தவன் - பிராணிகள் வதையும்படி கொடுமை செய்தவன். நரகு உறுவர் - நரகம் அடைவர். மன்னுயிர்க்கு - நிலைபெற்ற மற்றப் பிராணிகளுக்கு.

பழ - விள: தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ண வேண்டும்.

14. ஆஷாடபூதிகள் - கள்ள வேடந்தரித்து நல்லொழுக்கமுள்ளவர்கள் போல் நடிப்பவர்கள். தாழ்வடம் - நீண்ட (உருத்திராக்க) மாலை. கரவடம் - வஞ்சனை. வேடம் - வேஷம். வாது - வழக்கு. அயன் - பிரமன். உருத்திராக்கம் - உருத்திராக்ஷம்.

பழ - விள: பகலில் மவுனசாமியார்: இராத்திரியில் உருத்திராக்ஷப் பூனையா?

**கதைக் குறிப்பு**:— அயன் தேடும் வரலாறுவது: சிவபெருமானுடைய அடிமுடிகளைக் காண, பிரம விட்டுணுக்கள் ஒரு காலத்தில் பந்தயம் போட்டு, பிரமன் அப்பெருமானுடைய முடியையும், விஷ்ணு அவருடைய பாதத்தையும் தேடப் புறப்பட்ட வரலாறு அருணாசலப் புராணத்திலுள்ளது.

உருத்திராக்ஷப்பூனை என்பது, ஒரு கிழப்பூனை எலி முதலியவைகளைப்பிடித்துத் தின்ன வலியற்றிருந்த போது, உருத்திராக்ஷமாலை யணிந்து யாத்திரைக்குப் புறப்படுவதாகப் பாசாங்கு செய்தது. எலிகள் பல அவ்வேடத்தை மெய்யென நம்பி அதனுடன் யாத்திரைக்குப் புறப்பட்டன. பூனை பகல் எல்லாம் மவுனஞ்சாதித்துச் சாமியார் போலிருந்து, இராத்திரியானதும் அவ்வெலிகளில் சிலவற்றைப் பிடித்துப் பக்ஷித்து வந்தது. சில நாளைக்குப் பின்பு பூனையின் வஞ்சகச்செயலை எலிகள் அறிந்து அவைகள் தத்தம் இருப்பிடம்போய்ச் சேர்ந்துவிட்டன. இஃது ஒரு பழைய கற்பனைக்கதை. இக்கதையின் பொருட்டு, வஞ்ச ஒழுக்கம் பூண்டவர்களாகிய ஆஷாடபூதிகளுக்கு, உத்திராக்ஷப் பூனை என்பது பழமொழியாய் வழங்குவதாயிற்று.

15. கை சொல்லும் பனை காட்டும்களிறு - சொல்லப்படும் பனைமரத்தைப் போலும் துதிக்கையையுடைய யானை. களிறு - ஆண்யானை. (பிடி - பெண்யானை) உரி - தோல், உரிக்கப்படுவது, தொழிலாகு பெயராய் இங்குத் தோலை உணர்த்திற்று. களிற்றுரியார் - சிவபெருமான். மை சொல்லும் கார் அளி - மையின் வண்ணத்தை யொத்த கருமையான வண்டுகள். தாழை மலர் - தாழம்பூ. மெய்மை - உண்மை.

பழ - விள: மெய் சொல்லி வாழாதான், பொய் சொல்லி வாழ்வானோ? மெய் சொல்லிக் கெட்டாரும் இல்லை; பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை - என்னும் பழமொழியின் கருத்தைக் கொண்டதே பாட்டினீற்றடியில் குறிக்கப்படும் பழமொழி.

கதைக் குறிப்பு:—தாழைமலர் பொய் சொல்லி வாழ்ந்தது இல்லை. வரலாறு: ஒருகாலத்தில் பிரமதேவனும், திருமாலும் வாதிட்டுச் சிவபெருமானின் அடியையும் முடியையும் காணப் புறப்பட்டனர். திருமால் பன்றி உருவெடுத்துச் சிவபெருமான் பாதங்களைத் தேடிச்சென்றார். பிரமதேவன் அன்னப்பறவை வடிவமெடுத்துச் சிவபெருமானின் முடியைப் பார்ப்பதற்குச் சென்றார். திருமால் ஜோதிவடிவாய் நின்ற சிவபெருமானுடைய

அடியைத் தேடிக்காண முடியாமல் திரும்பிவந்துவிட்டார். பிரமதேவன் பெருமானின் முடியைக்காணுது விண்ணில் வருந்தி நின்ற காலத்திலே, அப்பெருமானின் முடியிலிருந்து ஒரு தாழம்பூ உதிர்ந்து கீழே வந்து கொண்டிருந்தது. அதைப் பிரமதேவன் கண்டு, 'பூவே! நீ, நான் சிவபெருமானின் முடியைக் கண்டதாகச் சாக்ஷி சொல்லவேண்டும்' என்றூர். அதுவும் அதற்கு உடன்பட்டுச் சிவபெருமானிடத்தில், 'பிரமதேவன், தேவரீர் முடியைக் கண்டார்' என்று பொய் சாக்ஷி சொல்லியது. சிவபெருமான் அதன் பொய்யுரையை உணர்ந்து, 'நீ பொய் சொன்னதினுல், இனி நீ நான் அணியும் பூவாகமாட்டாய்' என்று தள்ளிவிட்டார். இதன் முழு விவரம் அருணுசல புராணத்திற்காண்க.

16. அகந்தை - செருக்கு; கர்வம். நிடேதம் - நிஷேதம்; குற்றம். சுந்தரர்க்கு - சுந்தரமூர்த்தி சுவாமிகட்கு. துலங்கும் - விளங்கும். தாழ்ச்சி - குறைவு.

பழ - விள: சந்திரனைப்பார்த்து நாய்குரைத்தால், சந்திரனுக்குத் தாழ்வு உண்டோ?

கதைக் குறிப்பு :—சுந்தரர்க்குத் தூது சென்றது - சுந்தரமூர்த்தி நாயனூர், பரவை என்னும் பெண்பாலை மணந்தபின்பு, இரண்டாவதாகச் சங்கிலிநாச்சியார் என்னும் மாதை மணந்து கொண்டார். இதை யறிந்த பரவையார் நாயனூரிடத்தில் ஊடல்கொண்டார். இதனுல் நாயனூருக்கு மனத்துன்பம் அதிகரிக்கவே, சிவபெருமான் சுந்தரர் வேண்டுகோளுக்கிணங்கிப் பரவையாரிடத்தில் தூதுசென்று, அவரது ஊடலைத் தீர்த்து வைத்தார். இதன் முழுவிவரத்தைப்பெரிய புராணத்திற்காண்க.

17. நாற்கவி - நான்குவித கவி. அவை: ஆசுகவி, மதுரகவி, சித்திரக்கவி, வித்தாரக்கவி. வழுவாமல்-குற்றம் இல்லாமல்; தவறுமல். புவி - பூமி. கொடுங்கோன்மை - கொடிய அரசு.

பழ விள: மூர்க்கஅரசனும் மூடமந்திரியும் நரகம்போவார்.

18. ஓத அரிய - சொல்வதற்கு அருமையான. காதில் அணி - காதில் ஆபரணமாக அணியப்பட்ட.

பழ - விள: காதுக்குக் கடுக்கன் இட்டால் முகத்துக்கு அழகு.

19. அருள் - கருணை. ஆகம நூல் - சமய சாஸ்திரம். இருவினை - நல்வினை தீவினைகள். பயன் - பிரயோசனம். கிரியா மார்க்கம் - நடக்கை வழி.

பழ - விள: குருடனுக்குக் குருடன் கோல் கொடுத்து வழி காட்டியதைப் போல்.

20. ஊற்று உள்ள - வருவாயுள்ள. அறம் - தருமம். கூற்று உள்ளம் - யமனுடைய மனம். மலைய - திகைக்க. சொன்னேன் - உரையசை. குடபால் - மேற்குப்பக்கம். குடபால் வீசுங்காற்று - மேற் காற்றுக்குப் பெயர்.

பழ - விள: காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும்.

21. வைதிடினும் - திட்டினாலும். வம்பு - சண்டை; வழக்கு. மெய்தவிர - உண்மை ஒழிய. எய்தவர் - செலுத்தினவர்; போட்டவர். இயம்புவீரே - சொல்லுவீரே.

பழ - விள: எய்தவர் இருக்க அம்பை நோவதிற் பலன் என்ன ? எய்தவன் எய்தால் அம்பு என்ன செய்யும் ?

22. சுற்றம் - பந்து; உறவு. வேதியர் - பிராமணர். சொற்ற - சொல்லப்பட்ட. நான்மறை - நான்கு வேதம். பரவும் - துதிக்கும்.

பழ - விள: பெற்றதாய் பசித்திருக்கப் பிராமண போசனம் செய்வித்தான்.

23. துன்மார்க்கர் - துஷ்டர்; தீயவழி செல்வோர். துடுக்கு - துஷ்டகாரியம். மெய்யதனில் - தேகத்தில். வழும்பு - வடு. பன்மார்க்கம் - பலவித தரும வழிகள். பதம் - சிறப்பு; மேன்மை.

பழ - விள: நல்ல மாட்டுக்கு ஓர் அடி. நல்ல பெண்டீர்க்கு ஒரு வார்த்தை.

24. விற்பனர் - கல்வியில் சிறந்தோர். கண்ணோட்டம் இரக்கம்; தாக்ஷண்யம். சொற்பருக்கு - கல்வியறிவில்லா அற்ப

ருக்கு. இறுமாந்து - கர்வித்து. பண்பு - குணம். அர்த்தராத்திரி - நடு இரவு.

பழ - விள: அற்பருக்கு வாழ்வு வந்தால் அர்த்தராத்திரியில் குடைபிடிப்பார்.

25. விசையம் - விஜயம். வி - மிகுந்த, ஜயம் - வெற்றி, மிக்க வெற்றி. வசை - பழி; நிந்தனை. திசை - திக்கு. பண்பு - தன்மை.

பழ-விள: பசுவைக் கொன்று செருப்பைத் தானங்கொடுத்தது போல.

26. கடந்தவர் - துறந்தவர்; சந்நியாசிகள். நற்றவர் - நல்ல தவசிகள். கொற்றவர் - அரசர்.

பழ - விள: பிச்சை சோற்றுக்குப் பேச்சு இல்லை.

27. இங்கிதமாய் - ஜாடையாக; நன்மையாக. நிருபர் - அரசர். உசிதம் - நன்மை. குழறி - உளறி. அபிஷேகமலிநீர் - திருமஞ்சனம் நிறைந்த ஜலம்.

பழ - விள: சிவபூஜைவேளையில் கரடியை விட்டு ஓட்டியதைப்போல, சிவபூஜைவேளையில் கரடி புகுந்ததுபோல.

28. உன்னிடினும் - நினைத்திடினும். தென்னவன்-பாண்டிய அரசன். சோழன் - சோழநாட்டு மன்னன்.

பழ - விள: தன்வினை தன்னைச்சுடும்; ஓட்டப்பம் வீட்டைச்சுடும்.

கதைக் குறிப்பு:—பட்டினத்தடிகள் துறவுபூண்டு இல்லறத்தினின்றும் நீங்கியபொழுது, அவருடைய தமக்கையாருக்குத் தம்பியின் செயல் அவமானமாகப்பட்டது. அதனால் அவள் தன் தம்பியாகிய பட்டினத்தடிகளைக் கொல்லவெண்ணி, நஞ்சைக் கலந்த அப்பத்தை அவரிடம் கொடுத்தாள். அவ்வப்பத்தின் தன்மையையும், அவளுடைய கெடுமதியையும் அறிந்த அடிகள், 'தன்வினை தன்னைச்சுடும்; ஓட்டப்பம் வீட்டைச்சுடும்' என்று சொல்லி, அப்பத்தை அவள் வசித்த வீட்டின் கூரையில் செருகி

விட்டார். முற்றுந் துறந்தவருடைய வார்த்தை பொய்க்காது ஆதலின், அவ்வீடு தீப்பற்றி எரிந்தது. அதுமுதல் அவர் கூறிய வார்த்தை தமிழ்நாட்டில் பழமொழியாய் வழங்கி வருகின்றது.

29. அந்தணர் - பிராமணர். வயவாள் - வெற்றியைத் தரும் வாளாயுதம். அவனி - பூமி; உலகம். மதுரவார்த்தை - இனிமையான சொல். நம் + தமக்கு—நந்தமக்கு.

பழ - விள: ஏழைகளுக்குத் தெய்வமே துணை.

30. அறிவு - யுக்தி; ஞானம். வித்தை - கல்வியறிவு. பரிந்து - வருந்தி. பான்மை - தன்மை. பார்மீதில் - பூமிமீதில். பந்தி - வரிசை. படுக்கும் - சேர்க்கும்.

பழ - விள: பணம் பந்தியிலே, குலம் குப்பையிலே. பணம் பத்தெட்டு வகை செய்யும். ஈட்டி ஈட்டின மட்டும் பாயும்; பணம் பாதாளமட்டும் பாயும்.

31. அருள் சுரந்து - கருணை பிறந்து. சொரூபம் - வடிவம். எளிது - எளிமை; கேவலம். துலங்கும் - விளங்கும். பழமை - மேன்மை.

பழ - விள: சோறு என்ன செய்யும்? சொன்ன வண்ணம் செய்யும். உலகம் சோற்றுமயம்.

32. எத்தர் - ஏமாற்றுபவர்; தந்திரஞ்செய்வோர். உலுத்தர் - உலோபிகள். மத்தர் - பைத்தியங் கொண்டவர். பத்தர் - பக்தர்; அடியார். பழிப்பார் - நிந்திப்பார். வெற்றி - தன்மை.

பழ - விள: பித்தருக்குத் தங்குணம் நூலினும் செம்மையாய்த் தோன்றும்.

33. பன்னகம் - பாம்பு. வேணி - சடை. பரமர் - சிவபெருமான். நடை - ஒழுக்கம்.

பழ - விள: காகம் அன்னநடை நடக்கப்போய், தன் நடையுங்கெட்டது.

34. செழுங்கள் - செழுமையான தேன்; நல்ல தேன். சோலை - தோப்பு. எழுதல் - போதல்; செல்லுதல். கள்ளர் -

திருடர். கொழுமை - வளமை; சிறப்பு. திருநீறு - விபூதி. தொழுதல் - வணங்குதல். ஆசாரம் - சீலம்.

பழ - விள: கும்பிடுங்கள்ளர், குழைக்கும் கள்ளர், அழுங் கள்ளர், தொழுங்கள்ளர், ஆசாரக்கள்ளர் இவர்களே பேர்பெற்ற கள்ளர்.

35. அகமும் புறமும் - உள்ளும் வெளியும், அதாவது மனமும் சொல்லும். தனம் - செல்வம்; ஐசுவர்யம். பொன்னி - காவேரிநதி. வாக்கு - சொல். சினம் - கோபம். மடிவர் - செத்துப்போவர்.

பழ - விள: மனத்திலே பகை ; உதட்டிலே உறவா ?

36. நகை - சிரிப்பு; எளனம். கனம் - பெருமை. இக்கட்டு - துன்பம்; ஆபத்து. கவறு - சூதாடு கருவி. திக்கு எட்டு - எட்டுத்திக்கு.

பழ - விள: சொக்கட்டான் ஆட்டம் பொல்லாத சூதாட்டம். சொக்கட்டான் பொல்லாத இக்கட்டு.

37. புகுதல் - நுழைதல். அகந்தை - செருக்கு. இறுமாந்து நடத்தல் - தருக்கி நடத்தல்; கருவமாக நடத்தல். வறுமை - தரித்திரம். மறுமை - மறுபிறப்பு.

பழ-விள: நிறைகுடம் தளும்பாது; குறைகுடம் கூத்தாடும்.

குறிப்பு:—விளக்கேற்றிப்புகுதல் - என்பது; பெரியோர் எவ்வளவு சிறப்புடையாராயினும் தங்களின் உயர்ந்த நிலைமையை வெளிக்குக் காட்டாமல் அடக்கமாயிருப்பார். அவர்களைத்தேடிச் செல்வோருக்கே அவர்கள் புலப்படுவார்கள். அதைநோக்கி ஆசிரியர், விளக்கேற்றிப் புகுதல் வேண்டும் என்றார். அற்பர்களோ வெனின், நான் பெரியவன் என்று இறுமாந்துநடந்து தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வர்.

38. ஞாலம் - பூமி; உலகம். நாவலர் - நாவன்மையுள்ளவர்; வித்துவான்கள். கனம் - மரியாதை. மால் - திருமால்; மஹாவிஷ்ணு.

பழ - விள: ஆலமரம் பழுத்ததென்று பறவைக்குச் சீட்டு அனுப்புவார் எவர் ? 'மரம்பழுத்தால் வௌவாலை வாவென்று

164513



கூலி இரந்தழைப்பார் யாவரும் இங்கில்லை'-என்னும் செய்யுளின் முற்பகுதி இப்பழமொழிக்கருத்துடன் ஒத்திருத்தல் காண்க.

39. அடுத்தமனை - அசலகத்துவீடு. கணவன் உண்ணும் முன்னம் - புருஷன் சாப்பிடுவதற்கு முன்னே. கடுத்தமொழி - வன்சொல். சிறுதனம - அற்பப் பொருள்; பெண்கள் கணவனுக்குத் தெரியாமல் சேர்க்கும் சிறு பொருள். விடை - விருஷபம்; எருது.

பழ - விள: குடித்தனம் கெட பிடாரியைப் பெண்டாகக் கொண்டான். பெண்டுகொண்டனையோ? பேய்கொண்டனையோ?

40. ஆழி - சமுத்திரம். அவனி - பூமி. அன்னமயம் - சோற்றுமயம். இரவலர் - யாசகர். எழ் உலகம் - எழு உலகம். அவை மேலுலகம் எழு, கீழுலகம் எழு என இருபிரிவாகும். மேலுலகங்களாவன:—பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம். கீழுலகங்களாவன:—அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம். நிர்வாணம் - பிறந்த சொரூபத்தோற்றம்.

பழ . விள: நாழி நெல்லுக்கு ஒரு புடவை விற்றாலும் நாய் நிர்வாணந்தானே.

41. நன்றி - நன்மை. கயவர் - கீழ்மக்கள்; அற்பகுணமுள்ளவர். வித்தகம் - ஞானம்.

பழ - விள: சாம்பலிட்டு விளக்கினாலும் பித்தளைக்குத் தன்னாற்றம் போகாது.

42. சலியாமல் - வெறுப்பு அடையாமல். தண்டலையில் தாயகனார் - தண்டலைப்பதியைத் தாய்வீடாகக்கொண்ட (இருப்பிடமாகக் கொண்ட) சிவபெருமான். பொலிவாகி - விளக்கமாகி. கொழு - கலப்பையின் கொழுமுனை. கொழுமீதில் வந்த பொருள் - மேழிச்செல்வம். மலிவு - மிகுதி. மாரி - மழை.

பழ - விள: கலியாணத்திலும் பஞ்சமில்லை; நெற்களத்திலும் பஞ்சம் இல்லை.

தண்டலையார் சதகசார அரும்பதவுரை முற்றிற்று.

---

O-,16KPK,T

55.

# தமிழ்வாசக வரிசைகள்

(பாட புத்தகங்களாக வைக்கத் தகுந்தவை)

---

[அரசாங்க அங்கீகாரம் பெற்றவை]

| | | அ. | பை. |
|---|---|---|---|
| மணிவாசகம்—I | (முதல் வகுப்புக்கு) | 2 | 6 |
| மணிவாசகம்—II | (இரண்டாம் வகுப்புக்கு) | 3 | 0 |
| மணிவாசகம்—III | (மூன்றும் வகுப்புக்கு) | 4 | 0 |
| மணிவாசகம்—IV | (நான்காம் வகுப்புக்கு) | 5 | 0 |
| மணிவாசகம்—V | (ஐந்தாம் வகுப்புக்கு) | 6 | 0 |

இவ்வாசக வரிசைகள் புதிய முறையில் பல பாடங்களும் சித்திரங்களும் கொண்டு விளங்குகின்றன. சென்னை துரைத்தனத்தாராலும், சிலோன் துரைத்தனத்தாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. எல்லா எயிடட், பஞ்சாயத்து போர்டு பாடசாலைகளில் பாட புத்தகங்களாக வைக்கத் தகுந்தவை. இவைகளை அனுபவமுள்ள ஆசிரியர்கள் எழுதியதால், ஒவ்வொரு ஆசிரியரும் இப்புத்தகங்களைச் சிறுவர்களுக்குப் பாடமாக வைக்கும்படி கோருகிறோம். இவை கிடைக்குமிடம்:—

ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம்,
56, பவழக்காரத் தெரு, சென்னை.

# குடிசைத்தொழில் நூல்கள்
## (Cottage Industry Books)

### "தேனீ வளர்த்தலும் தேன் சேகரித்தலும்"
### (Bee-Keeping and Honey-Gathering)

புதிய முறையில் தேனீ வளர்த்துத் தேன் எங்ஙனம் சேகரிப்பதென்பதைக் குறித்து இந்நூலில் மிக விவரமாகப் படங்களுடன் எழுதப்பட்டிருக்கிறது. இத்தொழிலுக்கு முதலும் இல்லை; செலவும் இல்லை. அவரவர் பணியே முதலும், செலவும். ஒருவர் இத்தொழிலைச் செய்தால் வருஷம் 1-க்கு 400 ரூபாய் சம்பாதிக்கலாம்.

1 புத்தகம் விலை 0—8—0

---

### "சாயத்தொழில் மாணவன்"

நமது நாட்டுப் பொருள்களைக்கொண்டு பலவித சாயங்களைத் தயாரித்துத் துணிகளுக்கும் நூல்களுக்கும் ஏற்றும் விதமும், துணிகளுக்குப் பூக்கள் கொடிகள் மாதிரியில் அச்சிடும் விதமும், இந்நூலில் விவரமாக எழுதப்பட்டிருக்கின்றன. மாணவர் முதல் யாவரும் தங்கள் துணிகளுக்கு வேண்டிய சாயங்களைத் தயாரித்துக் கொள்ளலாம். தொழிலாகவும் செய்து வருமானம் பெறலாம்.

1 புத்தகம் விலை 0—4—0

---

### சோப் செய்தல் (SOAP MAKING)

இந்நூலில், வாஷிங் சோப், டாய்லட் சோப், பார் சோப், கார்பாலிக் சோப் ரோமசங்காரி சோப் முதலிய பலவித சோப்புச் செய்யும் முறைகளை விளக்கமாகப் படங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றன இந்தப் புத்தகத்தைப் படித்தவர்கள் யாவரும், ஒருவர் உதவி யில்லாமலே சோப் செய்யத் தெரிந்துகொள்ளுவார்கள். சொந்தத்திக்கும், வியாபாரத்துக்கும் சோப் செய்யும் எண்ணமுடையவர்கள் 1 ரூபாய் மணியார்டர் அனுப்பி இப்புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மே சக்கரவர்த்தி நயினர்,
கொழப்பலூர் போஸ்ட். (Via) ஆரணி, N. A. Dt.